# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2039 - 2017 සැප්තැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2017.09.29

*2039 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 158 |


**கவனிக்க.–** ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2017, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

157-B81211-353(2017/09)

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாணம் வர்த்தக மேல் நீதிமன்றம்
## (கொழும்பில் அதன் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கையில்)

இலங்கை இரத்மலானை பொருபன பெரி றோட், இல. 40 இல் அமைந்துள்ள த ட்ரேட்ஸ்மன் எஸ் எல் (பிரைவேட்) லிமிடட் கம்பனி தற்போது அவர்களது முக்கிய வர்த்தக நிலையத்தை இலங்கை இரத்மலானை மாளிகை வீதியில் இல. 10 இல் கொண்டுள்ளது.

மற்றும்

வழக்கு இல. : HC/சிவில்/39/2017/CO
தன்மை : கலைத்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பாகத்தின்கீழ் கம்பனியை கலைப்பது தொடர்பான நீதிமன்ற முன் உள்ள விண்ணப்பம் தொடர்பாக.

சியாமன் சுபர்லைட் லைட்டிங் கம்பனி லிமிடட்,
இல. 557, சியாகு ஷி,
ஹவ்கெங்க்,
ஹலி மாவட்டம்,
சியாமன்,
சீனா (361009).

டாக்டர் ராஜா கெலஸ்டின் புருனோ ஜோசப் மூலம் தோன்றுகின்றார்.
இல. 21, வில்சன் வீதி,
கொழும்பு 12,
இலங்கை.

- மனுதாரர்-

சிவில் நியாயாதிக்கத்தை செயல்முறைப்படுத்தும் மேல் மாகாண நீதிமன்றத்தில் மேற் குறிப்பிட்ட கம்பனியை கலைத்து முடிவிடும்படி மேற்குறித்த மனுதாரர் சார்பில் கே. பி. லோ. அசோசியேட்ஸ் இம்மன்றில் 2017, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி மனு ஒன்று சமர்ப்பிப்பதாக இத்தால் அறிவிப்பதோடு அம்மனு 2017, நவெம்பர் 9 ஆந் திகதியன்று நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் எனவும் அம்மனுவின் மீது கட்டளையைப் பிறப்பிப்பதற்கு அனுசரணை அல்லது எதிர்ப்பு தெரிவிக்க விரும்பும் கம்பனிக்கு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்பு செய்தவர்கள் மனுவை பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாக அந்நோக்கத்திற்காக சமூகமளிப்பதற்கு இயலுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. மேலும் மனுவின் பிரதியை அதற்குரிய கட்டணங்களைச் செலுத்திய பின் கம்பனிக்கு கடன் கொடுத்தவர்கள் அல்லது பங்களிப்பு செய்தவர்கள் கீழே கையொப்பமிட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. பி. லோ அசோசியேட்ஸ்,
சட்டத்தரணிகளும் பிரசித்த நொத்தாரிசுகளும்,
இல. 218, ஹல்ப்ஸ்டோப் வீதி, தளம் 2,
கொழும்பு 01200.

**குறிப்பு**.- மனுவை விசாரணை செய்யும் போது சமூகமளிக்க எண்ணங்கொண்டவர்கள் அவர்களின் அபிப்பிராயங்களை மேலே குறிப்பிட்ட கே. பி. லோ அசோசியேட்ஸ்க்கு எழுத்து மூலமாகவோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்கலாம். தபால் மூலம் சமர்ப்பிக்க விரும்பும் நபர்களின் பெயர், விலாசம் அல்லது ஏதேனும் வர்த்தக நிலையமானால் அதன் பெயர், விலாசம் என்பவற்றை அறிவித்தலில் குறிப்பிடுவது அவசியமாவதோடு நபர் அல்லது கம்பனி அல்லது அவருடைய அல்லது அவர்களுடைய சட்டத்தரணி (இருப்பின்) கையொப்பமிட்டு 2017 ஆம் ஆண்டு நவெம்பர் 8 ஆந் திகதி மாலை ஆறு (6) மணிக்கு முன் மேற்குறிப்பிட்டவர்களுக்கு கிடைப்பதற்கு ஆவண செய்வதோடு தபால் மூலம் அனுப்புவதனால் அவ்வாறே கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும்.

9-867